# உங்கள் பிள்ளை தமிழில் பேச
# ஊக்குவிக்கச் சில எளிய உத்திகள்

# நாள்தோறும் உரையாடலாம் வா!

- தித்திப்பான திங்கள் (உனக்குப் பிடித்தவற்றைப் பேசு)
- செம்மையான செவ்வாய் (நீ சிறப்பாகச் செய்த ஒரு செயல்பற்றிக் கூறு)
- புதையலைத் தேடும் புதன் (நீ கற்றுக்கொள்ள விரும்பும் ஒரு நடவடிக்கைபற்றிக் கூறு)




ஒவ்வொரு நாளும் கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்பையொட்டி உங்களது பிள்ளைகளைப் பேச வைக்கலாம்.
தலைப்பையொட்டி அவர்களை 3 – 5 வாக்கியங்கள் கூறச் சொல்லலாம்.

நீங்கள் இக்கேள்விகளைக் கேட்டு அவர்களுக்கு உதவி செய்யலாம்.

- திங்கள்
    - உனக்கு என்ன பிடிக்கும்? ஏன்?
    - அது கிடைத்தால் உனக்கு எப்படி இருக்கும்?

- செவ்வாய்
    - எந்தச் செயலைச் சிறப்பாகச் செய்தாய்?
    - இந்தச் செயலை நீ எப்போது செய்தாய்?
    - உனக்கு எப்படி இருந்தது? ஏன்?

- புதன்
    - எதைக் கற்றுக்கொள்ள விரும்புகிறாய்?
    - அதை நீ யாரிடமிருந்து கற்றுக்கொள்ள விரும்புகிறாய்?
    - அதை நீ எப்போது கற்றுக்கொள்ள விரும்புகிறாய்?
    - ஏன்?

# நாள்தோறும் உரையாடலாம் வா!

- வியக்க வைக்கும் வியாழன் (உன்னை ஆச்சரியப்பட வைத்த / அதிர்ச்சியடையச் செய்த ஒரு சம்பவம்பற்றிக் கூறு)
- வெற்றிகரமான வெள்ளி (நீ படைத்த சாதனைபற்றிக் கூறு)
- சந்தோஷமிக்க சனி (உன்னை மகிழச் செய்த ஒரு நடவடிக்கைபற்றிக் கூறு)
- ஞாபகத்தைத் தூண்டும் ஞாயிறு (நீ கடந்த வாரத்தில் கற்றவைபற்றி நினைவுகூர்ந்து கூறு)




ஒவ்வொரு நாளும் கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்பையொட்டி உங்களது பிள்ளைகளைப் பேச வைக்கலாம்.
தலைப்பையொட்டி அவர்களை 3 – 5 வாக்கியங்கள் கூறச் சொல்லலாம்.

நீங்கள் இக்கேள்விகளைக் கேட்டு அவர்களுக்கு உதவி செய்யலாம்.

- வியாழன்
  - எது உன்னை ஆச்சரியப்பட வைத்தது அல்லது அதிர்ச்சியடையச் செய்தது? ஏன்?
  - அந்தச் சம்பவம் எப்போது நடந்தது?
- வெள்ளி
  - நீ படைத்த சாதனை என்ன?
  - அதை நீ எப்போது செய்தாய்?
  - அப்போது உனக்கு எப்படி இருந்தது? ஏன்?
- சனி
  - எது உன்னை மகிழ்ச்சியடையச் செய்தது? ஏன்?
  - அந்தச் சம்பவம் எப்போது நடந்தது?

- ஞாயிறு
    - நீ எவற்றைக் கற்றுக்கொண்டாய்?
    - அவற்றுள் உனக்குப் பிடித்தது எது? ஏன்?

## நிருபராகப் பாத்திரமேற்றல் (பேட்டி காணுதல்)

பெற்றோரிடம் அல்லது வீட்டிலுள்ள பெரியவர்களிடம் கேள்விகள் கேட்டல்

**எடுத்துக்காட்டு:**

நீங்கள் சிறுவயதில் எப்படிப்பட்டவராக இருந்தீர்கள்? ஏன்?
இன்றும் அப்படி நடந்துகொள்கிறீர்களா? ஏன்?
எப்போது மனம் மாறினீர்கள்?



உங்களது பிள்ளையிடம் கூறவேண்டிய விளக்கம்:

நீ உன்னை ஒரு நிருபராகக் கற்பனை செய்துகொள். உனது வீட்டிலுள்ள ஒருவரைத் தேர்ந்தெடுத்துக்கொள். அவரிடம் நீ சில கேள்விகளைக் கேட்டு அவரைப் பேட்டி காணலாம்.

பேட்டிக்கான சில தலைப்புகள்: மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சி, மகிழ்ச்சியான ஒரு தருணம், பாடம் புகட்டிய ஒரு சம்பவம் மற்றும் பண்புகள் சார்ந்த கேள்விகள்.

# வியாபாரியாகப் பாத்திரமேற்றல்

வீட்டிலிருக்கும் ஒரு பொருளை எடுத்துக்கொள்ளவும். அதை உனது பெற்றோரிடம் விற்பனை செய்ய முயலவும்.




**எடுத்துக்காட்டு:**
காலணி
இது உங்களுக்குப் பிடித்த நிறத்தில் உள்ளது.

இது உங்களது கால்களை அழகாக வைத்திருக்கும்.

இதை அணிந்துகொண்டால் உங்களது கால்கள் ஒருபோதும் வலிக்காது. அது மட்டுமா, உங்களால் வேகமாகவும் நடக்க முடியும்.

இதை வார இறுதி நாட்களில் உங்கள் பிள்ளையைச் செய்ய ஊக்குவிக்கலாம்.

உங்கள் பிள்ளையை வியாபாரியாகப் பாத்திரமேற்கச் சொல்லுங்கள்.

பின் வீட்டிலிருக்கும் ஏதேனும் ஒரு பொருளைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளச் சொல்லுங்கள்.

அதைக் குடும்பத்தில் உள்ள யாரேனும் ஒருவரிடம் விற்கும்படி கூறுங்கள்.

பின்வரும் கேள்விகளைக் கேட்டு அவர்களைப் பேச வைக்கலாம்.

- இது என்ன பொருள்?
- இதை வாங்குவதால் என்ன நன்மைகள்?
- அதன் பயன்களைக் குறிப்பிட்டுப் பேசச் சொல்லலாம்.

# குடும்பத்தோடு சேர்ந்து ஒரு கதையைக் கூறி முடித்தல்

ஒவ்வொருவரும் ஒரு வாக்கியத்தைக் கூறிக் கதையை முடிக்கவும்.

எடுத்துக்காட்டு:
அன்று வெள்ளிக்கிழமை.
ராமு கடைக்குச் சென்றான்.
அங்கே அவன் தன் நண்பனைச் சந்தித்தான்.
……



இதைத் தினமும் செய்யலாம்.

இரவு உணவு உண்ட பின் நீங்கள் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து ஒரு கதையை உருவாக்கலாம்.

மூன்று பேர் கொண்ட குடும்பமாக இருந்தால் முதலில் மூன்று வாக்கியங்கள் கொண்ட கதையைக் கூறலாம்.

பிறகு 6 வாக்கியங்கள் கொண்ட கதையைக் கூறலாம்.

இவ்வாறு வாக்கியங்களின் எண்ணிக்கையைக் கூட்டிக்கொண்டே போகலாம்.

## மேலும் சில உத்திகள்...

- பேரங்காடிக்குச் செல்லும்போது வாங்க வேண்டிய பொருள்களின் பட்டியலை எழுதிக் கொடுக்கலாம் அல்லது சொல்லலாம். பின் உங்கள் மகன்/மகள் அதை எடுத்துவர வேண்டும்.



- ஒன்றாகச் சமையலில் ஈடுபடுதல். செய்யவேண்டியவற்றைத் தமிழில் கூறுதல்.

நீங்கள் பட்டியலை உங்களது பிள்ளையிடம் கொடுத்து அப்பொருள்களை எடுத்துக் கூடையில் அல்லது தள்ளுவண்டியில் வைக்கச் சொல்லலாம்.

அத்தருணத்தில் நீங்கள் ஒரு குறிப்பிட்ட பொருளைத் தேர்ந்தெடுத்து அதைப் பற்றிப் பேசலாம்.

எடுத்துக்காட்டுக்கு,

- காய்கறிகள் / பழங்கள்
    - எப்படித் தேர்ந்தெடுப்பது?
    - இவற்றை ஏன் வாங்கவேண்டும்?
    - இவற்றை ஏன் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்?
    - இவற்றை உண்பதால் நாம் அடையும் நன்மைகள் என்ன?

- மிட்டாய் / சாக்லேட் போன்ற நொறுக்குத்தீனி
    - இவை உனக்குப் பிடிக்குமா? ஏன்?
    - இவற்றை அதிகமாகச் சாப்பிடலாமா? ஏன்?
    - இவற்றைச் சாப்பிடுவதற்குப் பதிலாக நாம் எவற்றைச் சாப்பிடலாம்? ஏன்?

- பானம் (குளிர்பானம்)
    - இது எப்படி இருக்கும்?
    - உனக்குப் பிடிக்குமா?
    - இதை அதிகமாகக் குடிக்கலாமா? ஏன்?
    - இதற்குப் பதிலாக நாம் எதை அதிகம் குடிக்க வேண்டும்? ஏன்?